விலை சதம் 10

# சுதந்திரன்

SUTANTIRAN

வ. ஆ. 2001, பங்குனி 30 ௳ ஞாயிறு (12-4-70) ஸபர் பிறை 5— புத்தகம் 24 இதழ் 11

## பட்டிருப்பில் பச்சைக் கொடி கட்டவந்த கணவனை விரட்டினாள் ஒரு தமிழ்ப் பெண்!

### பிரதமருக்கு பாடம்புகட்ட ஊரெங்கும் தமிழரசுக் கொடிகள்!

பட்டிருப்பு ஏப்; 11— இன்று யூ. என். பி. தேர்தல் பிரச்சாரத்துக்காக பட்டிருப்பு வரும் பிரதமருக்கு தகுந்தபாடம் கற்பிப்பதற்கு பட்டிருப்பு தொகுதி முழுவதும் தமிழரசு மூவர்ணக் கொடிகள் பட்டொளி வீசிப் பறந்த வண்ணமிருந்தன.

பிரதமரே! உமது யூ.என்பி. இங்கு செல்லாது; வந்த வழியே திரும்பிப் போம்; என்று கூறுவதுபோல தமிழரசுக் கொடிகள் அசைந்தாடிக்கொண்டிருந்தன.

தமிழ்த்துரோகிகள் சிலர் ஆங்காங்கே ஒருசில பச்சைக் கொடிகளைப்பறக்கவிட்டபடி டட்லியை எதிர்நோக்கி காத்திருந்தார்கள். இவர்களைப் பார்த்து தமிழ் இளைஞர் கூட்டம் பரிகசிக்கிறதை இங்கு காணக் கூடியதாக இருந்தது.

ஆங்காங்கே ஒவ்வொரு சந்திகளிலும் கையில் தமிழரசுக் கொடிகளுடன் தமிழ் வெறிகொண்ட இளைஞர்கள் பிரதமரை ''வரவேற்க'' காத்திருந்தனர். பட்டிருப்பின் அரசியல் நிலையை இது படம்பிடித்துக் காட்டுவதாயிருந்தது.

தனது வீட்டில் பச்சைக் கொடிகட்டவந்த கணவனையேகொடி கட்டவிடாது ஒரு தமிழ்ப் பெண் விரட்டிய

(4-ம் பக்கம் பார்க்க)

## சிங்களவரைத் திருப்தி செய்ய தமிழ் காங்கிரஸ் நடவடிக்கை!

## நாகநாதன் என்ன செய்தார்?

கோண்டாவில் ஏப். 11.

''நாகநாதன் என்ன செய்தார் என்று ஒரு சிலர் நம்மைக் கேட்கின்றனர். அவர் ஆம் இந்த நாட்டில் வாழுகின்ற தமிழ் பேசும் மக்களின் உரிமைகளை மீட்பதற்காகதனது வாழ்க்கையை அர்ப்பணித்தார்.

''வெறியர்களின் காடைத்தனங்களுக்கு இலக்காகி இரத்தம்சிந்தினர். சிறை சென்றார். காலிமுகக் கடற்கரையில் நடைபெற்ற போராட்டத்தில் காடையர்களால் தாக்கப்பட்டு இரத்தம் சிந்தியதை தமிழ் மக்கள் என்றும் மறக்கமாட்டார்கள். சிறீ எதிர்ப்புப் போராட்டத்தில் சிறை சென்றதும், கச்சேரி வாயிலில் அவர் பொலிசாரின் குண்டாந்தடி முறியுமளவுக்கு தாக்ககப்பட்டதும் மக்கள் யாவரும் அறிவர். அது மட்டுமல்லாமல் எமது கட்சியை வளர்ப்பதற்கு அல்லும் பகலும் பாடுபட்ட பலருள் நாகநாதனும் ஒருவர். சுருங்கக் கூறின் எமது கட்சிக்கு தந்தையாக இருப்பவர் செல்வா. தாயாக இருப்பவர் நாகநாதன் அவர்களே.''

—இவ்வாறு கடந்த செவ்வாய்க்கிழமை கோண்டாவிலில் பண்டிதர் நா. இராசையா தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் தமிழரசுப் பொதுச் செயலாளர் திரு: அமிர்தலிங்கம் கூறினார்.

# சம அந்தஸ்து கோரிக்கை எமலோகத்துக்கு செல்லும்!

கொழும்பு, ஏப். 12

வடக்கே பருத்தித்துறை தொடக்கம் தெற்கே தேவந்துறை வரை தமிழுக்கு சம அந்தஸ்து என்று தேர்தல் காலத்தில் கூச்சல்கிளப்பி வரும் தமிழ் காங்கிரஸ் கட்சி அதற்கும் முழுக்குப்போட இடபோது முடிவு செய்துள்ளதாகத் தெரிகிறது. பெரும்பான்மைச் சிங்களவர்களின் பகைமையிலிருந்து தப்புவதற்காகவும் அவர்களைத் திருப்திப்படுத்தவும் தமிழ் காங்கிரஸ் சம அந்தஸ்து கோரிக்கையை கைவிட முடிவு செய்துள்ளதாம்.

சமஷ்டிக் கோரிக்கையை சிங்களவர்கள் எதிர்க்கிறார்கள்; எந்த ஒரு சிங்களவனும் அதை ஏற்றுக்கொள்ள ஒரு போதும் முன் வர மாட்டான் எனவே சமஷ்டிக் கோரிக்கையை தமிழரசுக் கட்சி கைவிட வேண்டும் என்று தமிழ் காங்கிரஸ் பிரசாரம் செய்து வருகிறதல்லவா?

தமிழரசுக் கட்சி சமஷ்டிக் கோரிக்கையை கைவிடச் செய்வதற்கு தமிழ் காங்கிரஸ் முதன் முதலில் முன் வந்து வழி காட்ட வேண்டும் என்று த. கா. தலைமைப் பீடம் கருதுகிறதாம்: அதாவது தமிழ் காங்கிரசின் சம அந்தஸ்து கோரிக்கையும் எந்த ஒரு செல்வாக்குள்ள சிங்களக் கட்சியும் இன்று ஆதரிக்கவில்லை: என்றுமே ஆதரிக்கவும் மாட்டாது; தமிழுக்கு சம அந்தஸ்து என்று தமிழ் காங்கிரஸ் தொடர்ந்து வெறுமனே தேர்தல் காலங்களில் குரல் கொடுப்பதால் வீணே சிங்களப் பெரும்பான்மையினரின் கோபத்துக்கும் விரோதத்

(4-ம் பக்கம் பார்க்க)



### முள்ளாமுனை தாம்போதி மீது பாலம்

### திரு. இராசதுரை முயற்சி வெற்றி

மட்டுநகர் ஏப். 10

வவுணதீவு ஆய்த்தியமலை வீதியில் முள்ளாமுனை தாம்போதியின் மீது பாலம் அமைக்கும்வேலைகள் ஆரம்பமாகிவிட்டன. ரூ. 72,000ல் மேற்படி பால அமைப்பு வேலைகள் தொடங்கப்பட்டுள்ளன. இப்பாலத்தை அமைக்கவேண்டுமென்று

(4-ம் பக்கம் பார்க்க)

## காங்கேசன்துறையில் தமிழரசு வாலிபரின் சைக்கில் ஊர்வலம்!

மாவிட்டபுரம் ஏப்ரல்—8

காங்கேசன்துறை தொகுதி தமிழரசு வாலிபர்களின் பிரமாண்டமான சைக்கிள் ஊர்வலமொன்று இம் மாதம் 12ம் திகதி நடைபெற இருக்கிறது:

தெல்லிப்பழை தமிழரசுக் கட்சிகிளையின் 6வது ஆண்டு மகாநாட்டை யொட்டியே இவ் வூர்வலம் நடைபெற இருக்கிறது.

தெல்லிப்பழை சந்தை மைதானத்தில் நடைபெறும் இவ் விழாவுடன் பொதுக் கூட்டமொன்றும்நடைபெற இருக்கிறது.

காங்கேசன்துறைத் தொகுதியில் முதன் முதல் நடைபெறும் இப்பகிரங்கக் கூட்டத்தில் தமிழரசுத் தலைவர்கள் கலந்து கொண்டு உரையாற்றுவார்கள்.

இக் கூட்டத்துக்கு முன் அலங்கரிக்கப்பட்ட ரதத்தில் மல்லாகம் சந்தியிலிருந்து தமிழரசுத் தலைவர்கள் ஊர்வலமாக கூட்டமைதானத்துக்கு அழைத்து செல்லப்படுவர்:

தொகுதியின் பல பகுதிகளில் இருந்து வரும் சைக்கில் ஊர்வலங்கள் தெல்லிப்பழை சந்தியில் சந்தித்து மல்லாகத்திலிருந்துவரும் ஊர்வலத்துடன் கூட்டமைதானத்தை அடையும்.

### பட்டிருப்பில்

## பணத்தையும் மதுவையும் வீசி மக்களை மயக்க யூ. என் பி முயற்சி!

களுவாஞ்சிகுடி ஏப்.11

பட்டிருப்பு தொகுதியில் போட்டியிடும் ஐக்கிய தேசியக்கட்சி வேட்பாளரும் அவருடையசகாக்களும், மதுவையும், பணத்தையும் காட்டி மக்களின் மனதை மாற்ற முயன்று வருகின்றனராம்; இவரது வலது கைபோன்ற ஒரு ஒய்வு பெற்றதலைமை ஆசியர் தனது பழைய மாணவரிடம் ஐக்கிய தேசியகட்சி வேட்பாளருக்கு வாக்களியுங்கள் நம் வேட்பாளர் எம், பியாக பதவி ஏற்றால் நிச்சயம் உங்களுக்கெல்லாம் உத்தியோகம் எடுத்து தருவார் என்று வற்புறுத்தி கூறுகிறாராம் ஆசியரின் கூற்றை எதிர்க்க முடியாத பழைய மாணவர்களும் அவருக்கு எதிரில் முகமனுக்கு ஆமா' போட்டு விட்டு திரிகின்றனராம். ஆனல் பல இளைஞர்கள், எங்களுக்கு உத்தியோகமும் பணமும் மதுவும் பெரிதல்ல, தன்மானமும் இன உணர்ச்சியும் கொள்கைகளும்தான பெரிது. என்று முகத்தில் அடித்தால் போல் கூறிவிட்டனராம். பாவம் அவர் செய்வதறியாதுமாணவர்களின் முன் தலைகுனிந்து சென்று விட்டாராம்.

### கதிரவேற்பிள்ளையின் கட்டுப்பணம்

கோப்பாய் ஏப்ரல்—11

கோப்பாய்த் தொகுதி தமிழரசுவேட்பாளர் திரு.சி. கதிரவேலுப்பிள்ளைக்கு எதிர்வரும் பொதுத் தேர்தலுக்கான கட்டுப் பணத்தை இப்பகுதி வாலிப முன்னணியினர் செலுத்துவார்கள். இதற்கான ஏற்பாடுகள் நடைபெறுகின்றன.

### டாக்டருக்கு மலர்க்கிரீடம்!

கோண்டாவில் ஏப்ரல்—11

கடந்த செவ்வாய்க்கிழமை கோண்டாவிலில் நடைபெற்ற கூட்டமொன்றில் ஒரு சிறுமி மூவர்ண மலர்களால் செய்யப்பட்ட கிரீடம் ஒன்றை டாக்டர் நாகநாதனின் சிரசின் மேல் அணிந்தாள். இந்நேரத்தில் நாகநாதன் அவர்கள் ஓர் தமிழ் அரசனைப்போல் காட்சியளித்தார். இக்காட்சி பார்ப்பவர்கள் மனதை மிகவும் கிளுகிளுக்கச் செய்வதாயிருந்தது.

### தர்மலிங்கத்தின் கட்டுப் பணத்தை மக்கள் செலுத்துவர்!

சுன்னுகம் ஏப். 10—

உடுவில் தொகுதியில் போட்டி இடும் தமிழ் அரசுக் கட்சி வேட்பாளர் திரு. வி. தருமலிங்கத்தின் கட்டுப் பணத்தை ஏழாலை-குப்பிளான் கிராமமக்கள் செலுத் முன் வந்துள்ளனர். சிலர் இப்பகுதி மக்களுக்குக் கடந்த பத்துவருடங்களாகச் செய்த சேவையைக் கௌரவிக்கும் முகமாகவே இந்த ஏற்பாடு செய்யப் பட்டிருக்கின்றது.

## நல்லூர்த்தொகுதியில் நாகநாதனுக்கே வெற்றி!

### கோண்டாவில் கூட்டத்தை குழப்பும் எதிரிகள் முயற்சி பலிதமாகவில்லை!

மாவிட்டபுரம், ஏப், 11

நல்லூர் தொகுதி, தமிழரசு வேட்பாளர் டாக்டர் நாகநாதனை ஆதரிக்கு முகமாக நடைபெற்ற பிரமாண்டமான ஊர்வலத்தை சில கயவர்கள் முறியடிக்க முயன்றபோதும் ஊர்வலம் வெற்றிகரமாக நடைபெற்றது;

எதிர்வரும் பொதுத்தேர்தலில் தமிழரசுக்கட்சி சார்பில் நல்லூரில் போட்டியிட இருக்கும் டாக்டர் ஈ. எம். வி. நாகநாதனை ஆதரிக்கும் முகமாக நல்லூர் தொகுதியில் உள்ள கோண்டாவிலில் ஓர் மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தையொட்டி நல்லூர் தொகுதி மக்கள் இதுவரை கண்டிராதவகையில் பிரமாண்டமான ஊர்மொன்று நடத்தப்பட்டது.

இவ்வூர்வலம் கோண்டாவிலிலிருந்து ஆரம்பமாகி காரைக்காடு வீதியால் இணுவிலை வந்தடைந்தது பின் பிரதான வீதியூடாக கோண்டாவில் சந்தியை அடைந்து புகையிரத நிலைய வீதியூடாக சென்று கோண்டாவில் அம்மன் கோவிலை— அடைந்தது

'இவ் ஊர்வலம் சென்ற வீதிகளில் எல்லாம் மக்கள் அனைவரும் பூரண கும்பங்கள் வைத்துதமது முழு ஆதரவையும் தெரிவித்தனர்.

கட்சியின் 5000 தொண்டர்கள் வரையில் கலந்து கொண்ட இவ்வூர்வலத்தின் முன்னே தமிழரசு கொடியை இருவர் பிடித்துச்செல்ல அதன் பிறகே மாட்டுவண்டி ஊர்வலமும் சைக்கிள் ஊர்

(4ம் பக்கம் பார்க்க)

## ரூ.6 லட்சத்தில் வவுணதீவு இலுப்படிச்சேனை வீதி

### வேலைகள் துரிதமாக நடைபெறுகின்றன

(மட்டக்களப்பு நிருபர்)

வவுணதீவு இலுப்படிச்சேனை வீதிகள் பரப்பி தார் வீதியாக மாற்றும் வேலைகள் சுமார் ரூ 6 லட்சத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

இப்பாதைவிவசாயிகளின் நலன் கருதி திருத்தப்பட வேண்டுமென்று திரு. செ. இராதுரை வற்புறுத்தி வந்ததின் பேரில் ரூ. 6 லட்சம் இவ்வீதி திருத்தத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

இவ்வீதி மண்முனை மேற்கு காரியாதிகாரி பிரிவில் மிக முக்கியமானதாகும்.

இப்பகுதி விவசாயிகளின் நலன் கருதி இவ்வீதி திருத்தப்படவேண்டுமென்று பல வருடங்கள் திரு. செ. இராதுரை வற்புறுத்தியிருக்கின்றார்.

இவ்வீதி திருத்தப்பட்டதும் இ. போ; சபை பஸ் போக்குவரத்து சேவையை ஆரம்பிக்கவிருக்கின்றது.

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் உரிமைக்குரல்

# எண்ணம்

## மதவெறிக்கு சாவு மணியடிப்பீர்!

ஒரு மொழிவைத்து உலகாண்ட தமிழினம் இன்று சிறுமைப்பட்டு சீர் குன்றி இருப்பதற்கு காரணங்கள் பல.

அவற்றுள் முக்கியமானவை இரண்டு:

ஒன்று மதவெறி; மற்றது ஜாதிவெறி!

இந்த இரண்டு பைசாசங்களும்தான் தமிழினத்தைப் பிடித்துள்ள தொற்று நோய்கள்!

இந்த இரண்டு சாபக்கேடுகளையும் ஒழித்துக்கட்டி தமிழினத்தை ஒற்றுமைப்படுத்துவதிலேதான் தமிழினத்தின் எதிர் காலப் பெருமையும் நல் வாழ்வும் தங்கியிருக்கப்போகிறது.

தமிழ் நாட்டில் ஜாதி, மத வெறிகளை ஒழித்துக்கட்டி பகுத்தறிவு கொண்ட மக்களாக பழந் தமிழினத்தை உருவாக்குவதில் திராவிட முன்னேற்ற கழகம் தன்னை ஈடுபடுத்திக் கொண்டது.

பேரறிஞர் அண்ணா இதற்காக தம் வாழ்வையே அர்ப்பணித்தார்.

ஈழத் தமிழகத்தில் தமிழ் பேசும் மக்களிடையே வளர்த்து விடப்பட்டிருந்த பிரதேச, ஜாதி, மத வெறிகளைக் கிள்ளியெறிந்து 'ஒன்றே குலம்—ஒருவனே தேவன்' என்ற தத்துவத்தை மீண்டும் நிலைநாட்டுவதற்காக தமிழரசுக் கட்சி அலுக்காமல் சளைக்காமல்—ஆத்திரப்படாமல்—ஆவேசங்கொள்ளாமல்—அமைதியாக கடந்த 22 ஆண்டுகளுக்கு மேலாக உழைத்து வருகிறது.

ஜாதி, மத வெறிகளை ஒழித்துக்கட்டுவதை தனது அடிப்படைக் கொள்கைகளில் ஒன்றாகவே தமிழரசுக் கட்சி ஏற்றுக் கொண்டிருக்கிறது.

தமிழரசுத் தலைவர்களில் இந்துக்கள் பெரும்பான்மையோராக இருக்கிறார்கள்; கிறிஸ்தவர்கள் இருக்கிறார்கள்; இஸ்லாமியர்கள் இருக்கிறார்கள்.

ஆனால் எவரும் எந்த நேரத்திலும் மத வெறிக்கு' மதத்துவேஷ சிந்தனைகளுக்குதுளியும் இடமளித்ததில்லை—

தமிழரசுக் கட்சிக்குள் உயர்சாதித் தமிழர்கள் என்று கூறப்படுவோரும் இருக்கிறார்கள்; தாழ்த்தப்பட்ட தமிழர் என்று அழைக்கப்படுவோரும் இருக்கிறார்கள்.

ஆனால் இவர்கள் யாரும் தமிழ் பேசும் மக்கள் என்ற ஒரேயொரு ஒருமைப்பாட்டு உணர்வைப்பெற்றிருக்கிறார்களே தவிர அணுவளவாவது சாதி வெறிபிடித்தவர்களாக—சாதித் திமிர்பிடித்தவர்களாக—இருக்கவில்லை.

இந்த அளவுக்கு—1956ம் ஆண்டுக்கு பின்னர்—தமிழ் பேசும் மக்களை சாதி, மத வேறுபாடற்ற தேசிய இனமாக தமிழரசுக் கட்சி உருவாக்கிவைத்திருக்கிறது; உருவாக்கிவருகிறது.

தமிழ் பேசும் இந்து, இஸ்லாமிய கிறித்தவ மக்களுக்கு பொதுவானதோர் பூரணத்துவ பல்கலைக் கழகம் தமிழ் பேசும் பிரதேசங்களுக்கு நடுநாயகமாக விளங்கும் திருமலையில் நிறுவப்பட வேண்டும் என்று தமிழரசுக் கட்சியும் தமிழறிஞர்களும் தமிழ்ப் பல்கலைக் கழக இயக்கத்தினரும் 1956ம் ஆண்டிலிருந்து கோரிவருகிறார்கள்.

இப் பல்கலைக் கழகப் பிரச்சினையில் மத வெறியை புகுத்தி தமிழ் பேசும் மக்களைப் பிரித்துவிடும் நோக்குடன் இந்துக் கலாசாரப் பல்கலைக் கழகம் என்றோர் பூனையை பெட்டியிலிருந்து எடுத்துவிட்டுப் பார்த்தார் திருவாளர் பொன்னம்பலம்!

ஆனால் இந்து மக்கள் இந்த ஏமாற்றுவித்தைக்கு இரையாக மறுத்தனர்; இதனால் இந்துப் பல்கலைக் கழகக் கோரிக்கையை நைசாக நழுவவிட்டு பூரணத்துவ பல்கலைக் கழகம் என்ற கோரிக்கைக்கு தாவிவிட்டார் திரு. பொன்னம்பலம்!

இதே போல—தமிழினத்தின் காவலனும் திரு. செல்வநாயகம் அவர்களுக்கு எதிராக தேர்தல் பிரசாரம் செய்வதற்கு மதத்துவேஷத்தை சிலர் பயன்படுத்த முனைகின்றனராம்!

வேல் வேண்டுமா? சிலுவை வேண்டுமா? வேல் வேண்டுமானால் எம்மை ஆதரியுங்கள்; சிலுவை வேண்டுமானால் செல்வநாயகத்துக்கு துண்டு போடுங்கள் என்று கயமைத்தனமான பிரசாரத்தில் ஒரு சிலர் இறங்கியுள்ளனராம்!

இது தமிழினத்தின் ஒற்றுமையை—உறவை வேரோடு சாய்த்து—மத வெறியை தூண்டிவிடும் கடைந்தெடுத்த கயமைத்தனமான பிரசாரமாகும்.

தமிழரசுத் தந்தையை தோற்கடிக்க இதைவிட வேறுவழியேதும் இல்லையென்ற நிலையில் இந்த வஞ்சகப் பிரசாரத்தில் இறங்கியுள்ளனர் சில வன்கணாளர்கள்.

ஆனால் காங்கேசன்துறைத் தொகுதி மக்கள் ஏமாளிகளும் அல்லர்; இளித்தவாயர்களுமல்லர். இந்த நாட்டுத் தமிழினம் செய்த தவப் பயன் என்று தமிழ் பேசும் மக்கள் அனைவராலும் கருதப்படும் தந்தை செல்வாவைத் தங்கள் பிரதிநிதிகளாகப் பெறும் பேறு பெற்றவர்கள் அவர்கள்!

தமிழரசுத் தந்தை அவர்கள் ஓர் கிறிஸ்தவர் என்பதைத் தெரிந்துகொண்டுதான் 1947ம் ஆண்டிலிருந்து இன்று வரை அவரைப் பாராளுமன்றத்துக்கு அனுப்பி வந்திருக்கிறார்கள்.

எனவே வேல வேண்டுமா? சிலுவைவேண்டுமா? என்று விஷமத்தனமான பிரசாரம் செய்து தமிழ் பேசும் மக்களை மதரீதியில் பிளவுபடுத்த விரும்பும் வஞ்சப் பிறவிகளுக்கு காங்கேசன்துறையிலுள்ள இந்து, கிறிஸ்தவ வாக்காளர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து தகுந்த பாடத்தை வைகாசி 27ல் கற்பிப்பார்கள் என்பதில் துளியும் ஐயமில்லை—

தமிழரசுத் தந்தை அவர்களுக்கு கடந்த தேர்தலைவிட அதிகப்படியான வாக்குகளால் வெற்றி மாலையைச் சூடுவதே மத வெறியர்களுக்கு சாவு மணியடிக்கும் சரியான வழியாகும்!

# தமிழுக்காக அடிபட்டு உதைபட்டு அடக்கு முறையை சந்தித்தோம் நாம்!

# இதைத்தவறு என்கிறார் பொன்னம்பலம்! இதயம்படைத்தோரே நல்லதீர்ப்புவழங்குவீர்

புத்தூர், ஏப்: 10

"சின்னமேளத் திருவிழாவுக்குப் போடப்படும் தேநீர் கடையைப் போன்றதே தமிழ்க் காங்கிரஸ் கட்சி. திருவிழாவில் சின்னமேளம் பார்க்கவரும் சனக்கூட்டத்தைப் பயன் படுத்தி, காசு சம்பாதிக்க விரும்பும் ஒருவன் தற்காலிக கடை ஒன்றைப் போட எண்ணி, ஐந்தாறு இரவல்பேணி, அடுத்த வீட்டு வேலியில் விறகு, தெருவில் கிடக்கும் கல்லு அடுப்புக் காலுக்கு இப்படியாகச் சேகரித்து வியாபாரம் நடத்துவான். திருவிழா முடியக் கடையும் முடிந்துவிடும். பின்பு பழையபடி இரவல் வாங்கிய பொருட்கள் அவரவரிடம் திருப்பிக் கொடுக்கப்படும். இதுபோலவே காங்கிரஸ் கட்சியின் தேர்தல் திருவிழாவும்.

சமசமாசக் கட்சியிலிருந்த ஆனந்த சங்கரி கம்யூனிஸ்ட் கட்சியிலிருந்த மோதிலால் நேரு, கொழும்பில் பிழைப்பு நடத்தி தேர்தலுக்கு மட்டும் வடபகுதிவரும் குமாரசாமி களா? எத்தனைமுறை வந்தாலும் அவன் திருடன்தானே? அதுபோல் பலமுறை வந்தாலும் அவர்கள் மக்களில் நிராகரிக்கப்பட வேண்டியவர்களே;



இத்தொகுதி காங்கிரஸ் வேட்பாளர் திரு. குணரத்தினம் தனிப்பட்ட முறையில் நல்லவர். எனது நண்பர். நீதிமன்றத்தில் ஒவ்வொரு நாளும் சந்திக்கிறேன். அதற்காக அவரை எதிர்த்துப் பிரசாரம் ஒழியாது விடமுடி

விட்டனர் என்றும் கூறியுள்ளார். இக்கூற்றை மறுத்து நான் ஒரு சிறு உதாரணத்தின் மூலம் விளங்கப் படுத்துகின்றேன்.

சிங்கள ஆட்சியாளர் என்ற திருடர்கள் மலைநாட்டுத் தமிழர்களின் குடியுரிமை, வாக்குரிமையைப் பறித்தும், தமிழ்ப் பிரதேசத்தைச் சூறையாடவும் முற்பட்டபோது அன்று தமிழினத்துக்குக் காவல் காரனாக இருந்தபோதிலும் திரு. பொன்னம்பலம் வீட்டுச் சாவியைத் திருடனிடம் தூக்கிக் கொடுத்து விட்டு. அவன் போட்ட மந்திரிப் பதவி என்ற எலும்புத் துண்டைக் கடித்துக் கொண்டிருந்தார்.

இதை யுணர்ந்த தமிழ் மக்கள் காவல்கரனை மாற்றி தமிழரசுக் கட்சி என்ற நல்ல காவல் காரனை வைத்தனர். முன்பு ருசி கண்ட திருடன் பின்பும் தன் கைவரிசையைக் காட்ட முற்பட்டான். ஆனல் இந்த நல்ல காவல் காரன் அந்தத் திருடனை

# ஆவரங்காலில் அமிர்தலிங்கம் பேச்சு

இன்னும் சிவநேசன் போன்றோரெல்லாம்தேர்தல்காலத்தில் மட்டும் வந்து கடை நடத்துவார்கள். தேர்தல் முடிந்ததும் ஆளுக்கொரு பக்கம் சென்றுவிடுவார்கள். பின்பு அவர்களுக்குத் தமிழ் மக்கள் பற்றிச் சிந்தனை யிராது.

ஆனல் தமிழரசுக்கட்சி மட்டுமே தேர்தல் காலத்தில் மட்டுமல்லாது தமிழ் மக்களின் வாழ்விலும் தாழ்விலும், இன்பத்திலும் துன்பத்திலும் பங்கு கொண்டு உழைத்து வருகின்றது. இதனைக் கடந்த கால வரலாறு தெட்டத்தெளிவாக உணர்த்துகிறது."

இவ்வாறு தமிழரசுக்கட்சியின் கிளிநொச்சி வேட்பாளர் திரு. மு, ஆலாலசுந்தரம் அவர்கள் கோப்பாய்த் தொகுதி வேட்பாளர் திரு. சி. கதிர்வேற்பிள்ளையை ஆதரிக்குமுகமாக ஆவரங்காலில் நடைபெற்ற பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

வைத்தியர் திரு. கணபதிப் பிள்ளை தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் மேலும் மேலும் அவர் பேசுகையில் கூறியதாவது:-



ஆறுமுறை தோற்றுவிட்டேன் நான்குமுறைதோற்றுவிட்டேன் என்று வாக்குக் கேட்க வருபவர்களைக் கண்டு அனுதாபம் காட்டாதீர்கள். ஏன் அவர்கள் நான்குமுறை தோற்கடிக்கப் பட்டார்கள் என்பதைச் சிந்தித்துப் பாருங்கள்.

உங்கள் வீட்டில் நான்கு முறை களவெடுக்க முயன்ற ஒரு திருடன் அது முடியாமையால் ஐந்தாவது முறையும் வந்தால் அவனிடம் அனுதாபப்பட்டு வீட்டுச்சாவியை அவனிடம் கொடுத்துவிடுவீர்


யுமா? நட்புவேறு, அரசியல் வேறு, தமிழினத்துக்குத் துரோகம் புரிந்த, தமிழினத்துக்கு விமோசனம் காட்ட முடியாத காங்கிரஸ் கட்சியில் குணரத்தினம் கேட்கும் வரை அவர் தமிழினத்தின் விரோதியே, எனவே அனுதாபத்துக்காக வாக்குகேட்பர்களிடம் மிகவும் எச்சரிக்கையாக நடந்துகொள்ளுங்கள்.

வெளிநாட்டில் மிகவும் மதிக்கப்படுகின்ற ஒரேயொரு தமிழர் கட்சி தமிழரசுக் கட்சியே தி.மு.க. தலைவர்கள் தந்தை செல்வா மீதும் தமிழரசுக் கட்சிமீதும் மிகுந்த மதிப்பு வைத்துள்ளார்கள். ஏனெனில் அங்கு தி. மு. க. வும் இங்கு தமிழரசுக் கட்சியும் தான் தமிழினத்தின் ஈடேற்றத்துக்கு அந்தரங்க சுத்தியோடும் செயல்படுப் கட்சிகளாகும்.

தமிழரசுக் கட்சியின் பொதுச்செயலாளர் திரு. அ. அமிர்தலிங்கம் பேசுகையில்:

எனக்குப் பெரிதும் ஆச்சரியம் என்ன வென்றால் நமது முயற்சியால் ஒருசில உரிமைகளையாவது இந்த அரசாங்கத்திடமிருந்து பெற முனைந்த நேரத்தில் அதற்கெதிராக தென் இலங்கையில் துவேசப் பிரசாரம் நடத்திய சிறிமா அம்மையாரின் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் ஒரு தமிழர் வட இலங்கையில் அதுவும் கோப்பாய் தொகுதியில் போட்டியிட முடிவு செய்துள்ளது கண்டு ஆச்சரியமடைகின்றேன். இந்த முகத்துடன் அவர் பிரசாரம் செய்யப் போகிறாரோ தெரியாது. ஆனல் அவர் (திரு. எம். துரைரசா) மே மாதம் 27ல் கட்டுப் பணத்தைக் காப்பாற்றினல் இது மிகமிக ஆச்சரியமான விடயமாக இருக்கும். (கூட்டத்தில் ஒரே சிரிப்பு)

மிக அண்மையில் திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலத்தின் கருத்து ஒன்றை பத்திரிகையில் படித்திருப்பீர்கள். 1956ம் ஆண்டுவரை தமிழ்க் காங்கிரஸ் தலைமையிலிருந்தபோது தமிழர்கள் தன்மானத்துடன் தலை நிமிர்ந்து வாழ்ந்தார்கள் என்றும், ஆனல் அதன் பின்பு தமிழரசார் அடி, உதை வாங்கித் தந்து தமிழினத்தைத் தலைக் குனிவு அடையச் செய்து



எதிர்த்துப் போராடினான் எதிர்த்துப் போராடும் போது திருடன் சும்மாயிருப்பானா? அடிக்கத்தானே செய்வான்? எனவே தமிழரசுக் காவல் காரன் செய்தது பிழையானதா?

தனிச் சிங்களச் சட்டம் கொண்டு வரப்பட்டபோது. உடனடியாகவே அதனை எதிர்த்து காலி முகத்திடலில் சத்தியாக்கிரகம் செய்தோம். அடி, உதை பட்டோம். திருமலைத் தீர்மானம் நிறைவேற்றினோம். எமக்குக் கொடுத்த வாக்குறுதிகளை மறுத்த ஆட்சியை எதிர்த்து கச்சேரி வாசல்களில் இருமாதம் அரசாங்கம் இயங்க முடியவில்லை என்று கூறுமளவுக்கு சத்தியாக்கிரகம் செய்தோம். இவையெல்லாம் தவறானது? தமிழ் மக்கள் தந்த அதிகாரத்தைப் பயன்படுத்தி அவர்கள் இட்ட கட்டளையை நிறைவேற்றியது குற்றமா? எதிர்கால சந்ததிவாழ்வதற்காக எங்கள் உடம்பில் அடி வாங்கினோம். ஆனல் தமிழ் காங்கிரஸ் கட்சி எதிர்கால சந்ததியின் அழிவுக்கே மிகப் பெரிய அடியைத் தேடிக் கொடுத்து விட்டது.

அரசியலில் நேர்மையாளரைக் காண்பது மிகமிக அரிது அப்படிப்பட்ட நேர்மையாளரில் திரு. கதிரவேற்பிள்ளை முதன்மையானவர். அவர் இம்முறை தன்னைப்போட்டிக்கு நிறுத்த வேண்டாமென்றும் தான் முழு நேர ஊழியனாகக் கட்சிக்குத் தொண்டாற்றுவதாகவும் கேட்டுக் கொண்

(4-ம் பக்கம் பார்க்க)

# கொட்டமடிக்கும் டட்லியாரே! பட்டிருப்பில் கட்டுப்பணமே தட்டுப்பட்டதை ஏன் மறந்தீர்?

## ஆனைக்கட்சி அடைவது தோல்வி! தானைத்தலைவன் 'இராசாவுக்கு' குவியும்வெற்றி!

பட்டிருப்புத் தொகுதியில் தமிழரசுக்கட்சித் தலைவருடன், தனது கட்சியின் வேட்பாளர் ஒருவர் போட்டியிட்டு, வெல்லப் போவதாக திரு: டட்லி சேனநாயக்கா அவர்கள் அண்மையில் கூறிய செய்தியை அறிந்து பட்டிருப்புத் தொகுதி மக்கள் மிகவும் அதிர்ச்சியடைந்துள்ளார்கள். இச்செய்தி பலருடைய கவனத்தையும் ஈர்த்துள்ளது.

பட்டிருப்புத் தொகுதியில் இது வரை நடந்தேறிய பொதுத்தேர்தல்களை நோக்கின், தமிழரசுக் கட்சியின் சார்பில் எப்போதும் போட்டியிட்டுக் கொண்டு வந்தவர் இராசமாணிக்கம் அவர்கள்: வெற்றியையும் அடைந்தவர். ஆனல் இவருடன் கடந்த காலங்களில் போட்டியிட்டு வந்த, காலஞ்சென்ற திரு. எஸ். யு. எதிர்மன்னசிங்கம் அவர்கள் ஒரு திட்டமான கொள்கையுடனே அல்லது குறித்த கட்சியிலோ போட்டியிட வில்லை. இதனல் இவர் கொள்கை அடிப்படையில் வாக்குகள் பெற்றுர் என்பது தவறு. தன்னுடைய தனிப்பட்ட செல்வாக்கைப் பிரயோகித்துத்தான் கணிசமான வாக்குகளைப் பெற்றுர் என்பது உண்மை.

சென்ற முறை நடந்து முடிந்த தேர்தலை கொஞ்சம் நோக்கின், தமிழரசுக்கட்சித் தலைவருடன் போட்டியிட்ட திரு. எதிர் மன்னசிங்கம் அவர்கள் ஐ. தே. க. சார்பில் போட்டியிட்டதிரு. சின்னத்துரை அவர்கள் ஆகியோர் நிலைபரிதாபத்துக்குரியது. ஐ. தே. க. சார்பில் போட்டியிட்டவர் கட்டுப் பணமும் இழந்தவர் என்பது தெரிந்த விடயம். ஆனல் திரு. எதிர் மன்னசிங்கம் அவர்கள் கணிசமான வாக்குகளைப் பெற்றுர், திரு. இராசமாணிக்கம் இரண்டாயிரத்துக்கு அதிகமாக வாக்குகளால் தெரிவு செய்யப்பட்டார்.

இம்முறை நடக்கப் போகின்ற தேர்தலை நோக்கின், தமிழரசுக் கட்சித்தலைவர் திரு. எஸ். எம். இராசமாணிக்கத்துடன் ஐ. தே. கட்சியில் திரு. எஸ். யு. தம்பிராசா என்பவர் கேட்கின்றுர். திரு. சின்னத்துரை அவர்கள் தேர்தலில் இருந்து விலகிக் கொண்டார் என அறியக் கூடியதாக இருக்கிறது.

திரு. தம்பிராசா என்பவர் முன்பு கூறப்பட்ட திரு. எஸ். யூ. எதிர்மன்னசிங்கத்தின் தம்பியாவர். இவர் தேர்தலில் போட்டியிட வந்தகாரணம், தனது அண்ணனின் செல்வாக்கை தானும் பிரயோகித்து வாக்குப் பெறலாம் என்ற எண்ணத்தில் தான். அண்ணனில் அனுதாபம் கொண்டவர்கள் ஆதரிக்கத்தான் செய்கிறுர்கள். இதே வேளையில் ஐ. தே. கட்சியை எதிர்க்கின்றதிரு. எதிர்மன்ன சிங்கத்தின் ஆதரவளர்களின் நிலையும். திரு, எதிர்மன்ன சிங்கத்தை எதிர்த்த யு. என், பி. ஆதரவாளர்களின் நிலை மிக கஷ்டத்தில் இருப்பதை இங்கு அறியக் கூடியதாக இருக்கின்றது. இவர்களின் ஆதரவு, திரு. டட்லி சேனநாயக்காவின் அறிவிப்பின் பின் தமிழரசுக் கட்சியின் பக்கம் செல்வதும் இப்போது வெளிப்படையாகக் காணக் கூடியதொன்றுகும்.

தனது கட்சிக்குப் பட்டிருப்புத் தொகுதியில் ஆதரவு இல்லை யென்பதை திட்டவட்டமாக அறிந்த டட்லி அவர்கள், தன் கவனத்தை திரு. எஸ். தம்பிராசா பக்கம் செலுத்தினுர். சின்னத்துரை தனது கட்சியில் கேட்டால் நிச்சயம் கட்டுக்காசை இழப்பது உறுதி என்பதையும் அவர் அறிவார்.

தம்பிராசாவுக்கு இருக்கிற செல்வாக்கை தனது கட்சிக்கு இருக்கின்ற செல்வாக்கு என்று சொல்ல வேண்டுமென்ற நப்பாசை பிடித்த டட்லி அவர்கள், அவருக்கே யு. என். பி. டிக்கட்டைக்கொடுத்தார். இம்முறைதேர்தலில் திரு. தம்பிராசா எடுக்கப்போகும் வாக்குகள் தனிப்பட்ட தம்பிராசாவுக்கே உரியது அல்லாமல் ஐ. தே, க. வுக்குரியதல்ல என்பதை உறுதியாக சொல்லமுடியும்.

தனது கட்சி தமிழரசுக் கட்சித்தலைவரை தோற்கடிக்கும் என்கின்ற திரு. டட்லி அவர்கள், தம்பிராசாவை விடுத்து சின்னத்துரையையோ அல்லது வேறு ஒருவரையோ தனது கட்சியில் நிறுத்தி, கட்டுக்காசையாவது எடுத்துக் கொள்வாரா என்று நாம் துணிவுடன் அவருக்கு சவால் விடுகின்றேம். டட்லியின் தப்புக்கணக்கு பிழையென்பதை திரு. இராசமாணிக்கத்துக்கு வெற்றிமாலை சூடுவதன் மூலம் விரைவில் பட்டிருப்பு மக்கள் உணர்த்துவார்கள் என்பதில் ஐயமில்லை.

—பட்டிருப்பு அரசியல் அவதானி



## விவாதமுறையிற் பிரசாரக் கூட்டங்கள்

காங்கேசன்துறை, ஏப். 10

காங்கேசன்துறை தமிழரசு வாலிப முன்னணி இளைஞர்களும், மாதர் முன்னணியினரும் சேர்ந்து புதுமுறையிலான தேர்தற் பிரசாரக் கூட்டங்களை நடாத்தத் தீர்மானித்துள்ளனர்.

பொதுமக்கள் மத்தியிற் பொய்ப் பிரச்சாரங்களைக் கட்டவிழ்ந்துவிடும் நிலையை மக்கள் மத்தியிலே கேள்விகளாக எழுப்பி அதற்குப் பதிலடி கொடுக்க அவர்கள் தயாராகிவிட்டனர். விவாத அரங்குகளினுல் பொதுமக்கள் தங்கள் சந்தேகங்களைத் தீர்த்துக் கொள்ள முடியும் என்ற நினைவிலேயே அவ்வாறு செய்வதற்குத் தீர்மானித்துள்ளனர்.

### காவலூரில் தமிழ் காங்கிரஸ் வேட்பாளர் யார்?

வேலணை, ஏப். 4

எதிர்வரும் தேர்தலில் ஊர்காவற்றுறைத் தொகுதியில் தமிழ் காங்கிரஸ் அபேட்சகர் சம்பந்தமாக, த. கா. ஆதரவாளர்களிடேயே பெரும் கருத்துவேற்றுமை உண்டாகி வருகிறது. திரு. சிவஞானம் அவர்களை இம்முறை தேர்தலில் நிறுத்தினுல் கட்டுக்காசுகூட கிடைக்காதென அவர்கள் மேலிடத்திற்குத் தெரிவித்துள்ளனர். இதன் காரணமாக இறுதி நேரத்தில் பெரும்மாறுதல் ஏற்படக் கூடுமென நம்பிக்கையான வட்டாரங்களிலிருந்து அறியப்படுகிறது.

ஊர்காவற்றுறைத் தொகுதியில் த. கா. உத்தியோகபூர்வமாக தனது அபேட்சகரை வெளியிடவில்லையெனவும், இவ்விஷயமாய் மிக விரைவில் கட்சி ஆலோசிக்க முடிவு செய்திருப்பதாகவும் மேற்படி வட்டாரங்கள் கூறின. இது இவ்வாறு இருக்க வேறு இரண்டு பெயர்களும் டலமாக அடிபட்டுவருகிறது:

• திரு. சிவஞானம் தன்னை தேர்தலில் நிறுத்தாவிட்டால்தால் தான் வேறு கட்சிக்காக வேலைசெய்யப்போவதாயும் கூறிவருகின்றுராம்.

### பண்டிதரின் வேலைத்திட்டம்

ஏப்ரல்— 21 வரை ஊர்காவற்துறைத் தொகுதியில் தமிழரசுக்கட்சியின் வேட்பாளர் திரு. கா. பொ. இரத்தினம் அவர்களின் பிரசார வேலைத்திட்டம் வருமாறு:— 12, 13- நயினுதீவு 12இல் பொதுக்கூட்டம்: 15 அனலைதீவு (பொதுக் கூட்டமும்). 16 எழுவைதீவு (பொதுக் கூட்டமும்). 17 மண்டைத்தீவு (பொதுக்கூட்டமும்) 18 அல்லைப்பிட்டி 19 புங்குடுதீவு வல்லன் பொதுக்கூட்டம் 20 சரவணை 21- நாரந்தனை (பொதுக்கூட்டமும்)

## மூதூரில் புத்தாண்டுத் தமிழ் விழா

சம்பூர், ஏப்: 10

மூதூர் தமிழ் இளைஞர் இயக்கத்தினர் எதிர்வரும் 15-4-70 புதன்கிழமை பி. ப. 1-30 மணிக்குப் புது வருட கலைவிழா ஒன்றினை நடாத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்து வருகின்றனர். மூதூர் பட்டின சபைத் தலைவர் திரு: அலியார்தம்பி கே. பி. அவர்கள் தலைமை தாங்கும் இவ்விழாவில் பிரதம விருந்தினர்களாக ஆ. தங்கத்துரை, பா: நேமிதான் முதலானேர் கலந்து கொள்வார்கள்.

இயல் அரங்கில் ஈழத்தின் முன்னணிப் பேச்சாளர்கள் குறிப்பாக சொல்லின் செல்வர் செ. இராசதுரை, வழக்கறிஞர் எம்; ஆலாலசுந்தரம், மலைமதி சந்திரசேகரம், திரு. எஸ் மணவைத் தம்பி, இன்னும் பலர் கலந்துகொண்டு சொற்பெருக்காற்றுவர்.

கவிதை அரங்கில் பொங்கு தமிழ் என்னும் பொருளில் காசி ஆனந்தன், ஈழமேகம், அண்ணல், ஈழபாரதி, ஆகியோர் கலந்துகொள்ளுவர். இதைத் தொடர்ந்து இடம் பெறும் இசையரங்கிள் சம்பூர் ஸ்ரீகணேச இசைக் கழகத்தினரின் இசைவிருந்தும், வீரசிங்கம் குழுவினரின் வில்லுப் பாட்டும், இசைச் செல்வன் இராஜவனின் இசைவிருந்தும், சந்தான லட்சுமி சகோதரிகளின் இசைவிருந்தும் இடம் பெறும். விழா இறுதியில் நடனம், நாட்டுக்கூத்து, நாடகம் முதலானவைகள் இடம் பெறும்.

## நவரத்தினத்தை அல்பிறட்தம்பி ஐயா ஆதரிக்கின்ருரா? கட்டுக்காசைக் காப்பாற்ற பொய் வதந்திகள்!

(ஊர்காவற்றுறை நிருபர்)

''ஊர்காவற்றுறைத் தொகுதியில் என்னுடன் போட்டியிடும் மூன்று வேட்பாளர்களும் தோல்வியைக் கண்டு துவண்டு சோர்ந்து முக்கூட்டணியாகத் திரண்டு என்னை எதிர்க்கின்ருர்கள். பல பொய் வதந்திகளைப் பரப்புகின்ருர்கள், பொய்யையும் புரட்டையும் பரப்பி தேர்தலை வெல்ல முடியாது என்பதை இவர்கள் இன்னும் அறிந்து கொள்ளவில்லை.''

இவ்வாறு தமிழரசுக் கட்சியின் ஊர்காவற்றுறைத் தொகுதி வேட்பாளர் திரு. கா. பொ. இரத்தினம் ஊர்காவற்றுறைச்சந்தைமைதானத்தில் நடைபெற்ற தமிழரசுக் கட்சியின் மாபெரும் பிரசாரக் கூட்டத்தில் பேசும் பொழுது குறிப்பிட்டார். நாரந்தனைக் கிராமசபை முன்னைநாள் தலைவர் திரு. ச. அருமைநாதர் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் திரு. இரத்தினம் தொடர்ந்து பேசியதாவது:-

''திரு. கதிரவேலு தமக்காக திரு. அல்பிறட் தம்பி ஐயா வந்து தேர்தல் வேலை செய்வார் என்று ஒரு வதந்தியைப் பரப்பி வந்தார். ஆனல் இப்பொழுது திரு. வ. நவரத்தினத்துக்காக திரு. அல்பிறட்தம்பிஐயா ஊர்காவற்றுறைக்கு வந்து தம்முடைய ஆதரவாளர்கள் சிலரைத் தமது வீட்டில் கூட்டி திரு. நவரத்தினத்தை ஆதரிக்க வேண்டும் எனச் சொன்னதாகப் பெரிய வதந்தி இப்பகுதியில் பரப்பப்படுகின்றது.

### தம்பி ஐயாவின் கடமை

''நான் காரியாதிகாரி அலுவலகத்தையும் பொலிசு நிலையத்தையும் வேலணைக்குக் கொண்டு சென்று விடுவேன் என்றும் ஆகையால் என்னை எதிர்க்க வேண்டுமென்றும் திரு. தம்பிஐயா சொன்னதாகவும் நவரத்தினத்தின் கையாட்கள் கதை பரப்புகின்ருர்கள். இதைவிட திரு: தம்பிஐயாவுக்குச் செய்யும் பெரிய துரோகம் உண்டா?

திரு. அல்பிறட் தம்பிஐயா பண்பு மிக்கவர்; இத்தொகுதியில் தமிழரசுக் கட்சியை அசைக்க முடியாதென்பதையும் அறிந்தவர். எனவே அவர் இவ்வாறு செய்திருப்பார் என்று கூறமுடியாது. அவருடைய பெயர் இப்பொழுது சந்திக்கு இழுக்கப்பட்டுள்ளது. எனவே இந்த வதந்திகள் யாவும் பொய்யானவை என்பதை மக்களுக்கு அறிவிப்பது திரு. தம்பிஐயாவின் கடமையாகும். இதைக் கவனித்து தமது நிலைமையை விளக்கி உடனே ஓர் அறிக்கை விடுமாறு நான் அவரைக் கேட்டுக் கொள்கின்றேன்.''

### மக்களே விழிப்பாக இருங்கள்

நான் காரியாதிகாரி அலுவலகம் முதலியவற்றை எங்கும் கொண்டு செல்லமாட்டேன் என முன்னரே இந்த இடத்தில் நடைபெற்ற தமிழரசுக் கட்சிக்கிளை நிறுவற் கூட்டத்தில் பகிரங்கமாகக் கூறினேன். இன்றும் அதனை மீண்டும் வற்புறுத்திக் கூறுகின்றேன். மக்கள் அனுபவிக்கும் வசதிகளைக் குறைப்பது அல்ல; தேவையான வசதிகளைச் செய்து கொடுப்பதே ஒரு நல்ல பாராளுமன்ற உறுப்பினரின் கடமையாகும்.

பிரதேசவாதங்கள் - சாதி சமய வேற்றுமைகள் - சொந்தபந்தங்கள் — ஊர் உறவு பாசங்கள் எனும் இவற்றையெல்லாம் கடந்து வேறுபாடின்றித் தொண்டாற்றுவதையே தமிழரசுக் கட்சி தன் குறிக்கோளாகக் கொண்டுளது. இதனை அறியாதவர்கள் கண்ணிருந்தும் குருடர்களாகவும் காதிருந்தும் செவிடர்களாகவும் வாழ்பவர்களே!

தோல்வியைக் கண்டு துடிப்பவர்கள் இதனைப் போல இன்னும்பல பொய்களை அவிட்டு விடுவார்கள் எனவே மக்கள் விழிப்பாக இருக்க வேண்டும்.

### திருநாவுக்கரசு பேச்சு

தமிழ் அரசுக்கட்சியின் புங்குடுதீவுக் கிளைச் செயலாளர் திரு. க. திருநாவுக்கரசு பேசுகையில் குறிப்பிட்டதாவது:-

திரு. கதிரவேலு பாண் கொடுத்தும் வாய்ப்பாடு மட்டை கொடுத்தும் ஒடு கொடுத்தும், சீமெந்து கொடுத்தும் கோவிலுக்கு காசு கொடுத்தும் வாக்குகளை விலைக்கு வாங்கலாம் என்று எண்ணுகின்றுர். இதுவரை அவர் கொடுப்பதாக கூறின தொகைகள் பத்துலட்சத்துக்குமேல் எனச் சிலர் கணக்கிட்டுளர். தீவுப்பகுதி ப. நோ. கூ. சங்க சமாசத் தலைவராயிருக்கும் இவர் தேர்தலிற் குதித்த அன்றே தலைவர் பதவியை இராசினுமாச் செய்திருக்க வேண்டும். இவ்வாறு செய்யாததால் அந்த சமாச நிர்வாகம் சீரழுந்துவிட்டது. பொது மக்களின் பணம் பலவழிகளில் கையாடப்படுகின்றது; என மக்கள் முறையிடுகின்றனர். தேர்தல் முடிவதற்குள் இந்த சமாசத்துக்கு மூடுவிழா நடத்த வேண்டிவரும், எனவே எழுபதினுயிரம் மக்களின் சொந்தமான இந்த சமாச தலைவர் பதவியை திரு. கதிரவேலு உடனே இராசினுமாச் செய்ய வேண்டும்.

கிளிநொச்சி வேட்பாளர் திரு. மு. ஆலாலசுந்தரம் பேசுகையில் திரு. நவரத்தினத்துக்கு திரு. பாலசுந்தரம் சிவசுந்தரம் என்போருக்கு நேர்ந்த கதிதான் நேரும். எனவும் எந்தவிதமான பொய்ப் பிரசாரத்தாலும் திரு. நவரத்தினம் தமது கட்டுக்காசைக் காப்பாற்ற முடியாதெனவும் கூறினுர்.

திரு. க. கணேசு, திரு, வ. தியாகராசா முதலியனர் பேசினர்.

சுதந்திரன்
SUTANTIRAN

பழைய டி. ஆர். ஓ.
(வாக்கு கேட்டு)
வீடு வீடாக நுழைய
நீ யாரோ?

# ஆளைக்கட்சியின் அடிவருடி நவரத்தினராசாவுக்கு பாலேந்திரநாதனின் 11 கேள்விகள்!

திருகோணமலை ஏப். 11

எதிர்வரும் பொதுத்தேர்தலில் திருகோணமலைத் தொகுதியில்யில் போட்டியிடுவதற்காக ஐ. தே. கட்சியின் டிக்கட்டைப் பெற்றுக்கொள்வதற்கு இங்குள்ள இன்னுமொரு பிரமுகருடன் இழுபறிப்பட்டு பகீரதப் பிரயத்தனங்கள் பலவற்றைக் கடந்து ஓரளவு தனது டிக்கட் பெறும் போட்டி முயற்சியில் வெற்றிகண்டு திருகோணமலைத் தொகுதியில் ஐ. தே. க. வேட்பாளராகப் போட்டியிடக் காத்திருக்கும் பழைய டி. ஆர். ஓ. (காரியாதிகாரி) திரு. ஆர். நவரெட்ணராஜாவிடம், திருகோணமலை பத்தாம் குறிச்சி தமிழரசு வாலிப முன்னணிச் செயலாளர் திரு. இரா. பாலேந்திரநாதன் அவர்கள் காரசாரமாக பின்வரும் கேள்விகளை வினவுகின்றார். மக்களுக்குப்பொய் வாக்குறுதிகளை அளித்து கண்மூடித்தனமான பிரச்சாரங்களில் ஈடுபட்டுவரும் திரு. நவரெட்ணராஜாவின் திருகுதாளங்களுக்கும் தில்லு முல்லுத்தனத் திற்கும்முற்றுப்புள்ளிவைக்கும் இவ்வினாக்களுக்கு அவர் விடை பகருவாரா என எதிர்நோக்குகின்றனர் திருகோணமலை வாழ் பொது மக்கள்.

(1) ''தமிழரசார் திருக்கோணேஸ்வரப் பிரச்சினையை முன் வைத்து அரசாங்கத்திலிருந்து ஏன் வெளியேறவேண்டும்? இப்பிரச்சினையை எமது டட்லி ஐயா ஆறுதலாகச் செய்துமுடிப்பார்'' என்று கொட்டை எழுத்துக்களுடன் கூடிய தலைப்புடன், உதுபுமசைப் படத்துடனும் அன்று தினபதி முன்பக்கத்தில் ஓர் அறிக்கை வெளியிட்டிருந்தீரே. இப்பொழுது திருகோணமலை வாழ் தமிழ்பேசும் மக்களுக்கு என்ன சொல்லப் போகின்றீர்?

(2) அப்படியே உமது கூற்றுப்படியே உமது தலைவர் திரு. டட்லி சேனநாயக்கா ஒன்பது நிரந்தரக் காரிய தரிசிகளைக்கொண்ட ஒருகமிஷனை நியமித்திருந்தாலும் அக்கமிஷன் இற்றை வரையில் எள்ளளவேனும் செயற்பட்டதா? திருக்கோணேஸ்



திருமலைதமிழரசுவேட்பாளர்
பி. நேமிநாதன்

வரப் பூமி புனித நகராக்கப்பட்டதா? அக்கமிஷன் எங்கே ஐயா, சொல்லுமையா?

(3) திருகோணமலைத் தமிழ் பல்கலைக்கழக விடயத்தில் தங்கள் சொந்த அபிப்பிராயம் என்னவோ? தங்கள் கட்சியின் தமிழ் பேசும் நான்கு பா.உக்கள் நான்கு இடங்களில் அமைக்கும்படி கூறும்பொழுது திருகோணமலை ஐ. தே. க.வேட்பாளராகிய தாங்கள் என்ன கூறப்போகின்றீர்கள்?

(4) இலங்கைவாழ் தமிழ் பேசும் மக்கள் அனைவருமே ஒத்துக்கொண்டு திருகோணமலையில் தமிழ்ப்பல்கலைக் கழகத்திற்காக கல்நாட்டியதையும் மூடிமறைத்து தமிழ் மக்களைப் பிளவுபடுத்த வேண்டுமென்பதற்காக பல்கலைக்கழக கமிஷனை நியமித்த உங்கள் தலைவர் டட்லியின் அரசாங்கம் செய்துள்ள காரியத்தையிட்டு உங்கள் விளக்கம் என்ன? தெரிவிப்பீர்களா?

(5) ஆறும்வகுப்பு தமிழ் சரித்திரப் பாடப்புத்தகத்திலே உள்ள இலங்கையின் அமைப்புப் படத்தில் ''கோகன்ன'' என்று குறிப்பிடப்பட்டுள்ளஊர்எந்தஊர் என அறிவீர்களா? அவ்வூர் தமிழர் பெருமை பாடும் திருநாடாம் திருக்கோணமலை என அறிந்திருந்தால் இச்செய்கையைப்பற்றி தங்கள் கல்வி மந்திரியிடமோ, அல்லது தலைவரிடமோ தட்டிக் கேட்க துணிவற்றுப்போய் விட்டதா உங்களுக்கு? கூறுங்கள்.

(6) இளைஞர்களுக்கு வேலையெடுத்துத் தருவதாக கூறித் திரிகின்றீர்களே. இன்று வேலையிலிருக்கும் தமிழ்ப்பேசும் இளைஞர்களின் வேலைக்கு உலை வைக்கும் முயற்சியில் மறைமுகமாக ஈடுபட்டிருக்கும் உங்களால் இதனை மறுககமுடியுமா?

(7) ''யூ. என். பிக்கு வாக்களிக்கவேண்டும். அல்லது எனது அப்பாவைக்கூட அப்பாறைக்கு மாற்றலாக்குவேன்'' என பகிரங்கமாகக் கூறுகின்றனரே உமது கையாட்கள். நீங்கள் எம். பி. யாக வருவீர்கள் என்ற காரணத்தினாலா? அல்லது உமது ஏவலினாலா சொல்வீர்?

(8) வேலையற்ற வாலிபர்களுக்காக ஓர் வேலைவாய்ப்புத் திட்டத்தை வகுத்து செயல்படுத்தவிருக்கும் அன்பரே! இதனால்தானே திருகோணமலையில் இன்னும் 'தேசிய இளைஞர் இயக்கம்' ஆரம்பிக்கப்படாமல் இருக்கின்றது. கூறுங்கள் பதிலை.

(9) கல்குடாத் தொகுதியை பூலோக சொர்க்கமாக மாற்றியவர் எமது கட்சி அங்கத்தவரான தேவநாயகமேதான் என்று கூறுகின்றீர்களே. கல்குடாத் தொகுதி தமிழ்ப்பேசும் மக்கள் படும் கஷ்டத்தை அறியவில்லையா? அத்தொகுதியை சிங்கள மயமாக்க மறைமுகமாக எடுக்கப்படும் முயற்சிகளை இல்லையென்று மறுத்துரைக்க முடியுமா உங்களால்?

(10) தனித் தமிழ்க் கிராமமான ஈச்சிலம்பத்தை சேருவாவிலை என்ற சிங்களப் பகுதியுடன் இணைக்கப்பட்டபொழுது ஆட்சி மன்றத்திலே வீற்றிருந்தவர்கள் தங்கள் கட்சியினர் தான் என்பதை அறிவீர்கள் தானே? தங்கள் அயலூராம் மூதூர் தமிழ் மக்களுக்கு ஏற்பட்ட பிரச்சினை பற்றி தங்கள் எஜமானர்களைத் தட்டிக் கேட்கத் திராணியற்ற தீரரே, எவ்விதம்திருகோணமலை வாழ் தமிழ் பேசும் மக்களின் இன்னலகளைத் தட்டிக் கேட்கமுடியும் உங்களால்?

(11) ''யாழகற்றிச் சங்கத்தை'' அமைத்து நடத்துபவரே, உங்களால் கந்தறையான் சங்கத்தை அமைத்து நடத்தத் துணிவில்லையா?

அழகு தமிழில் டட்லி கையெழுத்திட்டாலும், சுந்தரத் தமிழில் பிரேமதாசா பேசிவிட்டாலும், இனிய தமிழில் இரியகொல்லை இரண்டொரு வார்த்தை அடுக்கிவிட்டாலும் இது காலவரை தமிழ் மக்களுக்கு சிங்கள இனவெறியர் இழைத்திட்ட இன்னல்களைத் தமிழ் மக்கள் ஒருபோதும் மறந்திட மாடடார்கள் என்பதை நினைவில் வைத்துகொள்ளுங்கள்.

மேற்கண்ட கேள்விகள் நான் கேட்கும் கேள்வியல்ல. திருகோணமலைத் தமிழ் மக்கள் கேட்கும் கேள்விகள். தாராளமாக யோசித்துப் பதிலிறுக்க முயற்சியுங்கள் பார்ப்போம்.



## அத்தானின் மண்டபம்

'பொன்னம்பலத்திலும் காணேன்... தேவி சிறீ தேவி...'

'என்ன அத்தான்... இன்று மெய் மறந்து சினிமாப்பாட்டு பாடுகிறீர்கள்...புதுமையாக இருக்கிறதே!'

'கண்ணே...நான் பாடியது சினிமாப் பாட்டா? மண்ணாங்கட்டி.......'

'ஏன் அத்தான்...என்ன சொல்கிறீர்கள் ... நீங்கள் பாடியது சினிமாப் பாட்டு இல்லையா?'

'கண்ணே...கேளடி... இன்று நான் ஈழத் தமிழினத்தின் தலைவர்களுடைய கொள்கை திறமைசாதனை இவற்றைக் கூட ஒரு புறம் தள்ளி வைத்து விட்டு தனியே அவர்களின் முகங்களை மட்டும் ஒரு தடவை கற்பனை பண்ணிப்பார்த்தேன்... அகத்தின் அழகு முகத்தில் தெரியும் என்பார்கள்...தந்தை செல்வாவின் முகம் எவ்வளவு அழகாக இருக்கிறது' கர்வத்தின் சாயலோ—சுயநலத்தின் அடையாளமோ—பதவி வெறியின் ஆசையோ எதுவுமே இல்லாத முகம்! அன்பும்அமைதியும் புன்னகையாய் ஒளிவிடும் அழகுமுகம்! வீரமும் விவேகமும் கண்களாகி விளங்குமோர் எழில் முகம்! தியாகம் குடிஇருக்கும் திருமுகம்!'

'ஆமாம் அத்தான்... தந்தை செல்வாவின்முகத்தில் மகான்களின் முகச் சாயலையே நானும் காண்கிறேன்!'

'கண்ணே... சரியாகச் சொன்னாயடி. தந்தை செல்வாவுக்குள்ள அன்பு முகச்சாயல் ஈழத்தில் வேறு எந்தத் தலைவரிடம் உண்டு? நானுந்தான் தேடிப்பார்த்தேன் ... சுந்தரலிங்கத்திடம் உண்டா என்று போய்ப் பார்த்தேன்...இல்லை! ஊர்காவற்றுரை நவரெத்தினத்திடம் உண்டா என்று சென்று பார்த்தேன் ... இல்லை! கடைசியாகப் பொன்னம்பலத்திடமாவது உண்டா என்று போய்ப்பார்த்தேன்... அங்கும் இல்லை... அப்புறம்தான் பாடஆரம்பித்தேன்...'

'ஓகோ...அதுதான் நீங்கள் பாடிய பாட்டா...? அழகானபாட்டு அத்தான்! எங்கே இன்னொருமுறை பாடுங்கள்...'

'பொன்னம்பலத்திலும் காணேன்... தேவி... சிறீ தேவி!'

## சாவகச்சேரி மாநாடு

## தமிழின ஒற்றுமைபற்றி மசூர்மவ்லானா விளக்குவார்!

சாவகச்சேரி, ஏப். 11

சாவகச்சேரித் தமிழரசு வாலிப முன்னணி, இளந்தமிழர் மாதர் மாநாட்டின் முதல் நாள் (20-4-70) காலை மரதன் ஓட்ட வீரர்களும், சைக்கிள் ஊர்வலத்தினரும் வந்துசேர்ந்தபின் தமிழரசுத் தந்தையின் முன்னிலையில் இவர்கள் சத்தியப்பிரமாணம் எடுத்துக்கொள்ளவிருக்கிறார்கள் அல்லவா? அதைத்தொடர்ந்து தந்தை தமிழரசுக்கட்சியின் மூவண்ணக்கொடியை ஏற்றி வைப்பார்.

இதைத் தொடர்ந்து வாலிப முன்னணி மாநாட்டு நிகழ்ச்சிகள் ஆரம்பமாகும். வாலிப முன்னணி தலைவர் திரு. எஸ். பி. கணபதிப் பிள்ளை அவர்கள் பேருரை நிகழ்த்துவார்.

இதைத் தொடர்ந்து ஜனாப் மசூர் மவ்லானா உரை நிகழ்த்துவார். அவர் தமது உரையில் தமிழ் நாட்டில் தமிழ் பேசும் மக்களின் ஒற்றுமையென்றால் என்ன? எந்த அடிப்படையில் என்பது பற்றி விளக்கம் கொடுப்பார்.

### சம அந்தஸ்து......

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

துக்கும் வெறுப்புக்கும் ஆளாக நேருகிறது; எனவே சம அந்தஸ்து கோரிக்கையை குழிதோண்டி புதைத்து விடுவோம் என்று தமிழ் காங்கிரஸ் தலைமை முடிவு செய்துள்ளதாம்.

சிங்களவர்கள் எவரும் ஏற்றுக்கொள்ள முன்வராத சம அந்தஸ்து கோரிக்கையை தாம் எழுப்பிக்கொண்டே, சமஷ்டியை சிங்களவர் ஏற்கார்; ஆகவே அதைக் கைவிடுக என்று தமிழரசுக் கட்சியிடம் கோரிக்கை விடுவதை சேலிக்கூத்தாகபொது மக்கள் கருத இடமேற்படும் என்று தமிழ் காங்கிரஸ் வட்டாரங்களில் சுட்டிக்காட்டப்பட்டதாம்.

சம அந்தஸ்து, சமஷ்டி, இரண்டையுமே சிங்களவர் இன்று ஏற்க மறுக்கிறார்கள். நாம் மட்டும் சமஅந்தஸ்தில் பிடித்துத்தொங்கிக்கொண்டு தமிழரசுக்கட்சியாரை சமஷ்டியைக் கைவிடும்படி கேட்பது முட்டாள்தனமானது; எனவே தேர்தல் மேடைகளில் வாயளவில் சமஅந்தஸ்து என்று கூறுவதையும் இனிக் கைவிட்டு விடுவோம்; இதனால் சிங்களவருக்கு திருப்தியும் மகிழ்ச்சியும் ஏற்படும்; என்று தமிழ் காங்கிரஸ் முடிவு செய்துள்ளதாம்.

### நல்லூர் தொகுதி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வலமும், டிராக்டர் ஊர்வலமும் சென்றன.

இறுதியாக வீடுபோல் அமைக்கப்பட்ட டிராக்டரில் நல்லூர் முன்னாள் எம். பீ. டாக்டர் ஈ. எம். வி.நாகநாதன், யாழ் முன்னாள் மேயர் சி. நாகராசா, மாநகரசபை உறுப்பினர் என். ரி. செல்லத்துரை, கொக்குவில் கி. ச. உபதலைவர் அருணாசலம் ஆகியோர் உட்பட மற்றும் சிலர் வீற்றிருந்தனர்.

இக்கூட்டத்தை குழப்புவதற்கு தமிழரசுக்கு எதிரான கட்சிகளின் கயவர் கூட்டமொன்று திட்டமிட்டுள்ளதாக பொலிசார் தெரிவித்தபோதும் ஊர்வலம் வெற்றிகரமாக நடைபெற்றது.

5 மைல் தூரத்துக்கு நடைபெற்ற இவ்வூர்வலம் நல்லூரில் தமிழரசுக் கட்சிக்கு உள்ளசெல்வாக்கை எடுத்துக் காட்டுவதாக அமைந்திருந்தது.

### தமிழுக்காக .....

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

டார். ஆனால் தந்தை செல்வநாயகம் அவரைக் கைவிட விரும்பவில்லை நேர்மையாளரைக் கைவிட்டால் நாம் எங்கே போவது எனவே தந்தையின் தொடர்ச்சியான வற்புறுத்தலைத் தொடர்ந்தே அவர் மீண்டும் போட்டியிடச் சம்மதித்தார்.'' என்று கூறினர்.

### முள்ளாமுனை......

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பல வருடங்களாக திரு. செ. இராசதுரை வற்புறுத்தி வந்ததின் பலனாக இவ்வேலைகள் ஆரம்பமாகியிருக்கின்றன.

படுவான்கரை என்று அழைக்கப்படும் மண்முனை மேற்கு காரியாதிகாரி பிரிவில் கட்டப்படும் நான்காவது பாலம் இதுவாகும்.

புளுவிழுந்த சேனை, நரிப்புல் தோட்டம், மன்னன் குடா பாலங்களை தொடர்ந்து நான்காவது பாலமாக இப்பால அமைப்பு வேலைகள் நடைபெறுகின்றன.

### பட்டிருப்பில் பச்சை......

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சம்பவம் ஒன்றும் இன்று நடந்தது.

தன் மானத் தமிழ்க்குலம் தாய்க் குலம் தமிழின எதிரிகளுக்கு தமிழர் பூமியில் இடமளிக்காது; அன்புக் குரிய கணவனைவிட அன்னைத் தமிழே மேல்-என்று தாய்க் குலம் கொண்டுள்ள உறுதியை எடுத்துக் காட்டுவதாக இச்சம்பவம் இருந்தது.

இப்பத்திரிகை சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிடெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு பண்டாரநாயகவீதி, 194 ஏ இல்லத்தில் 1970.ம் வருடம் ஏப்பிரல் மாதம் 12-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டது.

ஆசிரியர்: கோவை மகேசன்